DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
---
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, YERCAUD
DATE : 05.06.2025.

| | | |
|---|---|---|
| Case No. | : | CC. No.84/2022 |
| Deposition of Witness for Prosecution | : | PW.5 |
| Name | : | சந்தோஷ் |
| Father Name | : | சிவராம் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | xxxx |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Deposition of witness for prosecution side solemnly affirmed by Tr. V. Ravi, Junior Assistant, of this court, on 05.06.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

**(1வது எதிரி ஆஜர்.)**

**(2வது மற்றும் 3வது எதிரி ஆஜர் இல்லை. எதிரிகளுக்காக 355 of BNSS Act–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டது).**

**<u>முதல் விசாரணை:–</u>**

நான் தற்போது சேலம் மாவட்டம், மேட்டூரில் குடியிருந்து சென்னையிலுள்ள தனியார் IT நிறுவனத்தில் வேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது தங்கை. ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரிகளை தெரியும். கடந்த 27.05.2022–ம் தேதியன்று இரவு சுமார் 07.30 மணியளவில் நான் அ.சா. 1 வந்தனா, பிரேம்சிங், தீரன், ஆகியோர் பூக்கண்காட்சிக்கு செல்வதற்காக காரில் வீட்டிலிருந்து கிழம்பினோம். போய்விட்டு இரவு 08.30 – 09.00 மணிக்குள் திரும்ப வீட்டிற்கு வந்தோம். லேடீஸ்சீட் அருகிலுள்ள அ.சா.1 கடைக்கு முன்பாக காரை நிறுத்திவிட்டு வீட்டிற்கு செல்வதற்காக நாங்கள் வண்டியிலிருந்து இறங்கி சென்றபோது அ.சா.1–ன் கடை அருகே கடை வைத்திருக்கும் எதிரி வினோத்குமார் அவரது கடையை மூடிவிட்டு அவரது இருசக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு எங்களை பார்த்து தேவடியா பையா, கண்டார ஓலி உங்களை நான் என்னபன்றேன் பாரு, உங்களை எல்லாம் எரித்து விடுவேன் என்று

சொன்னார். நாங்கள் அவரிடம் ஏன் இப்படி பேசுகிறிர்கள் என்று கோட்டோம். அவர் அவரது மகனுக்கு போன் செய்தார். சிறிது நேரத்தில் அவரது மகன் நித்திஷ்குமார் மற்றும் அவரது நண்பர் பிரசன்ன குமார் ஆகியோர் அங்கு வந்தார்கள். 1-ம் எதிரி வினோத்குமார் அ.சா.1-வந்தனாவை முதுகில் கல்லால் அடித்தார். நித்திஷ்குமார் மற்றும் பிரசன்னாகுமார் இருவரும் சேர்ந்து அ.சா.4 பிரேம்தீப் சிங்கை கூர்மையான பொருளால் அடித்தார்கள். நான் தடுக்க சென்றபோது நித்திஷ்குமார் மற்றும் பிரசன்னாகுமார் இருவரும் சேர்ந்து என்னை கல்லால் இடுப்பில் அடித்தார்கள். சம்பத்தின் போது எதிரிகளுடன் 4-5 நபர்கள் இருந்தார்கள். நிறைய நபர்கள் இருந்ததால் நாங்களை பயந்துகொண்டு அங்கிருந்து வீட்டிற்கு ஓடிசென்றோம். பின்பு 1/2 மணிநேரம் கழித்து போலீசிஸ் புகார் தெரிவிப்பதற்காக வீட்டிலிருந்து காரை எடுத்துக்கொண்டு மேலே உள்ள சாலைக்கு வந்தபோது 3 எதிரிகள் மற்றும் 4-5 நபர்கள் அங்கு இருந்தார்கள். நித்திஷ்குமார் மற்றும் பிரசன்னாகுமார் இருவரும் சேர்ந்து என்னையும் அ.சா.4 பிரேம்தீப் சிங்கையும் கையால் அடித்தார்கள். நித்திஷ்குமார் மற்றும் பிரசன்னாகுமார் இருவரும் எங்களின் காரின் மேலே ஏரி நின்றுகொண்டிருந்தார்கள் அப்போது காரின் முன்பக்க கண்ணாடி உடைந்துவிட்டது யார் உடைத்தார்கள் என்று குறிப்பாக தெரியாது. அதன்பின்பு காவல் நிலையம் வந்தபோது அவர்கள் முதலில் சிகிச்சை பெறும்மாறு அறிவுறுத்தியதின் பேரில் ஏற்காடு அரசு மருத்துவமனையில் வெளிநோயாளியாக சிகிச்சையில் சேர்ந்தோம். என்னுடன் அ.சா.1 மற்றும் அ.சா.4 வெளிநோயாளியாக சிகிச்சை பெற்றார்கள். போலீசார் விசாரணை செய்தார்கள்.

<u>எதிரிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை:-</u>

நான் மேட்டூரில் குடியிருந்து வருகின்றேன். அ.சா.1 வந்தனா எனது தங்கை முறை. அ.சா.1-ற்கு ஏற்காடு லேடீஸ்சிட் அருகே சாக்லெட் கடை உள்ளது என்றால் சரிதான். அ.சா.1-ன் கடைக்கு பக்கத்தில் ஒரு சுவர் அடுத்து எதிரியின் கடை உள்ளது என்றால் சரிதான். எதிரியும் அவரது கடையில் சாக்லெட் மற்றும் வாசனை திரவியங்களை விற்பனை செய்கிறார் என்றால்

சரிதான். பூக்கண்காட்சிக்கு நீங்கள் செல்லும் போது ஆஜர் எதிரியுடன் அவரது மகன் மற்றும் அவரது நண்பர் உடனிருந்தாரா என்றால் இல்லை. அவ்வாறு உடன் இருந்தார் என்று கூறினால் தவறு என்றால் சரிதான். நீங்கள் பூக்கண்காட்சிக்கு எந்த நேரம் சென்றீர்கள் என்றால் இரவு சுமார் 08.30 – 09.00 மணிக்கு சென்றோம். சம்பவம் சுமார் 10–15 நிமிடம் நடந்திருக்கும். நாங்கள் பயந்துபோய் வீட்டிற்கு சென்று பின்னர் காவல் நிலையத்தில் சம்பவம் குறித்து எதிரிகள் அங்கேயிருந்து மீண்டும் தாக்கினார்கள் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லியுல்லிர்களா என்றால் சொன்னோம். சம்பவ இடத்திற்கு வருவதற்கு ஆஜர் 1–ம் எதிரி போன் மூலம் தகவல் அழித்ததின் பேரில் 2 மற்றும் 3வது எதிரி எப்போது வந்தார்கள் 2–3 நிமிடத்தில் வந்தார்கள். முதல் விசாரணையில் உங்களை கூர்மையான ஆயுதத்தால் தாக்கியதாக சொல்லியுள்ளிர்களே அவ்வாறான கூர்மையான ஆயுதத்தினை குறிப்பிட்டு கூற முடியுமா என்றால் அவ்வகையான கூர்மையான ஆயுதம் கட்டையாக கூட இருக்கலாம். சம்பவத்தின் போது எதிரிகள் கல்லை கையில் வைத்திருந்ததை நான் பார்த்தேன். சண்டை நடந்தபோது அருகிலிருந்தவர்கள் வேடிக்கை பார்த்தார்களா என்றால் சுமார் 10 – 20 பேர் பார்த்தார்கள். சம்பவ நடந்த இடம் மூன்று ரோடுகளை இணையும் முக்கிய பகுதியாக உள்ளதா என்றால் ஆமாம். நித்திஷ்குமார் மற்றும் பிரசன்னாகுமார் இருவரும் சேர்ந்து எங்களது காரின் மேல் ஏறி நின்ற விவரம் குறித்து போலீசார் விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளேன். சம்பவம் நடந்த பிறகு காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால் இரவு சுமார் 09.30 – 10.00 மணிக்கு சென்றோம் அப்போது சம்பவம் குறித்து புகார் கொடுத்தீர்களா என்றால் அப்போது கொடுக்கவில்லை மறுநாள் காலை சுமார் 10.00 மணிக்கு புகார் கொடுத்தோம். மேற்படி புகாரை அ.சா.1 எனது தங்கை எழுதினார். சம்பவதன்று இரவு புகார் கொடுப்பதற்காக காவல் நிலையம் சென்றபோது போலீசார் உங்களை மருத்துவமனை சென்று சிகிச்சை பெற்று வர சொல்லி சம்பவம் குறித்து கேட்டுவிட்டு அனுப்பிவைத்தனர். சம்பவத்தன்று சம்பவம் நடந்தபோது எதிரிகளுடன் 4–5 பேர்

வந்ததாக கூறியுள்ளீர்களே அவர்களை தெரியுமா என்றால் தற்போது நினைவில் இல்லை. அ.சா.1 சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் விவரங்கள் உங்களுக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி சம்பவத்தில் உங்களுடைய பொருள் ஏதேனும் தொலைந்துவிட்டதா என்றால் ஆமாம் செயின் ஒன்று தொலைந்துவிட்டது அது குறித்து போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். உங்களது காரினை எதிரிகள் கல்கலை கொண்டு தாக்கும் போது நீங்கள் எங்கு அமர்ந்திருந்தீர்கள் என்றால் நான் பின் இருக்கையில் அமர்ந்திருந்தேன். காரிலிருந்து திரும்ப வரும்பொழுது எதிரிகள் தாக்கினார்கள் என்ற விவரத்தினை போலீசார் விசாரணையில் கூறியுள்ளீர்களா என்றால் கூறியுள்ளோம். சம்பவத்தன்று மறுநாள் காலை புகார் கொடுத்தற்கு பின்னர் சுமார் 11.00 மணியளவில் போலீசார் எங்களை விசாரணை செய்தார்கள். 27.05.2022-ம் தேதியன்று போலீசார் உங்களை விசாரணை செய்தார்களா என்றால் என்னை அழைத்து சம்பவம் குறித்து கேட்டார்கள். சம்பவம் குறித்து மீண்டும் போலீசார் உங்களை விசாரித்தார்களா என்றால் இல்லை.  சம்பவம் நடந்த தேதிக்கு மறுநாள் அ.சா.1 மற்றும் அ.சா.4 காவல் நிலையம் சென்று வந்தார்களா என்றால் சென்று வந்தார்கள் நேரம் சரியாக தெரியவில்லை. உங்களுக்கும் எதிரிக்கும் இடையே உள்ள தொழில் பகையின் காரணமாக இவ்வழக்கினை எதிரிக்கு எதிராக தொடர்ந்துள்ளீர்கள்  என்றால் சரியல்ல.  மேற்படி சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை அவ்வாறான சம்பவமே நடக்கவில்லை என்றால் சரியல்ல.  அ.சா.1 வந்தனாவிற்கு உதவும் நோக்கத்தில் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிரிகள் என்றால் சரியல்ல.

Taken down by me in open court in the presence of the Accused. Read over to the witness and admitted by him/her to be correct.

Sd/-. R. Elanchezhian,
District Munsif-cum-Judicial Magistrate,
Yercaud.